இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 02.06.2026

# இருபதே நாளில் இருண்ட காலம்!

இருபதே நாளில் இருண்ட காலத்தை தமிழ்நாட்டு மக்களுக்குக் காட்டி விட்டார் முதலமைச்சர் விஜய்.

**சந்தி சிரித்துக் கொண்டு இருக்கிறது சட்டம் ஒழுங்கு. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மின்வெட்டு. மின்சாரம் இல்லாத வாழ்க்கைக்கு மக்களை பக்குவப்படுத்தி வருகிறார் விஜய். பேருந்துகள் இல்லாமல் அனைத்து பகுதியிலும் மக்கள் தொல்லைகளை எதிர்கொண்டு வருகிறார்கள். விவசாயப் பெருமக்கள் அனைத்து ஊர்களிலும் போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.**

**மதுக்கடைகள் மூடப்பட்டு வருகிறது என்பது மிகப்பெரிய நாடகம் என்பதை மக்கள் போராட்டங்கள் காட்டுகிறது. ‘பாட்டிலுக்கு பத்து ரூபாய்’ என்று பாட்டுப்பாடியவர் ஆட்சியில் 20 ரூபாய் வசூல் நடக்கிறது. ஆய்வு என்ற பெயரால் அவஸ்தையைக் கொடுத்து வருகிறார்கள் அமைச்சர்கள்.**

**த.வெ.க.வினர் ரீல்ஸ் எடுக்கும் இடமாக அரசு அலுவலகங்களை மாற்றி விட்டார்கள். மணல் கொள்ளை லாரிகள் மக்களால் சிறைப்பிடிக்கப்படுகிறது. நெல் கொள்முதல் செய்ய அதிக பணம் வசூலிப்பதாக பல்வேறு இடங்களில் புகார்கள் வந்துள்ளது.**

இந்த வரிசையில் வன்முறை வெறியாட்டம் மாநிலம் முழுக்க நடந்து கொண்டு இருக்கிறது.

- ★ கோவையில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். சிறுமி உயிரோடு இருப்பதாக முதலில் சொல்லிவிட்டு, பிணமாகக் கொடுத்துள்ளது போலீஸ். அம்மாவுக்குத் தெரியாமல் சிறுமியின் உடலை எடுத்துச் சென்றுள்ளார்கள். அவசர அவசரமாக எரித்துள்ளார்கள்.
- ★ ராமநாதபுரத்தில் கனிமவளக் கொள்ளைக்கு எதிராக புகார் கொடுத்த வினோத் என்பவரை போலீஸ் அதிகாரியே மிரட்டி இருக்கிறார். வினோத் வீட்டில் குட்கா இருப்பதாகச் சொல்லி சோதனை நடத்தி இருக்கிறது போலீஸ்.
- ★ காங்கேயத்தில் கஞ்சா ஆசாமிகள் சாலையில் அட்டகாசம் செய்ய அவர்களை அடக்க முடியாமல் போலீஸ்காரர்களே ஓட்டம் பிடித்தார்கள்.
- ★ சென்னை ஓட்டேரியில் 5 கிலோ கஞ்சா பறிமுதல்.
- ★ சென்னை புழல் பகுதியில் 3 கிலோ கஞ்சா, குட்கா, ஹான்ஸ் பறிமுதல்.
- ★ சேலம் சீலநாயக்கன்பட்டியில் வீட்டின் பூட்டை உடைத்து 54 சவரன் கொள்ளை.
- ★ நெல்லையில் பேராசிரியர் ஒருவர் வீட்டில் கொள்ளை.
- ★ திருவள்ளூரில் 2 கிலோ கஞ்சா பறிமுதல்.
- ★ கும்பகோணத்தில் பேனர் வைத்த த.வெ.க.வினரைத் தட்டிக் கேட்ட போலீஸார் கையை உடைத்துள்ளார்கள் அக்கட்சியினர்.
- ★ த.வெ.க. கொடியுடன் வந்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தை தாக்கி இருக்கிறார்கள்.
- ★ வேலூரில் செங்கல் சூளை உரிமையாளரிடம் மாமூல் கேட்ட த.வெ.க. ஒன்றியச் செயலாளரைக் கண்டித்து சாலை மறியல்.
- ★ மதுராந்தகத்தில் நகைக்காக மூதாட்டியை கொலை செய்த த.வெ.க. நிர்வாகி.
- ★ அமைச்சர் தென்னரசு பேரைச் சொல்லி வீடு வாங்கித் தருவதாக பணம் வசூலித்த த.வெ.க. பெண் நிர்வாகியைக் கண்டித்து முதியவர் ஒருவர் தற்கொலை.
- ★ சென்னையில் 16 வயது சிறுவனுக்கு மது கொடுத்து பாலியல் கொடுமை செய்த தலைமைக் காவலர் கைது செய்யப்பட்டுள்ளார்.
- ★ மதுரையில் பூட்டை உடைத்து 100 சவரன் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.
- ★ திருநின்றவூரில் தலைமைக் காவலர் ஓட்டிச் சென்ற வாகனம் மோதி 5 வயது சிறுமி பலியாகி இருக்கிறார்.
- ★ ஈரோடு கல்லூரி அருகே 3 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.
- ★ கடலூரில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் புதைக்கப் பட்டார்.
- ★ திருவாரூரில் பூட்டிய வீடு உடைக்கப்பட்டு 13 சவரன் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.
- ★ தூத்துக்குடியில் மது போதை தகராறில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை.
- ★ நிலக்கோட்டையில் 8 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த 80 வயது முதியவர்.
- ★ காட்பாடியில் அரசு பள்ளியின் பூட்டு உடைக்கப்பட்டு 18 மடிகணினிகள் திருடப்பட்டு உள்ளது.
- ★ பெருங்களத்தூரில் கட்டட இடிப்புப் பணியில் ஈடுபட்டு இருந்தவரிடம் கத்தியைக் காட்டி மிரட்டி அடித்துள்ளார் த.வெ.க. வட்டச் செயலாளர்.
- ★ திருவள்ளூரில் தொடர் கொள்ளைகள் நடத்தியதைக் கண்டுபிடிக்காத போலீஸாரைக் கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.
- ★ கிண்டியில் செல்போன் தொலைந்து போன பெண் கொடுத்த புகாரை வாங்க மறுத்துள்ளார்கள் போலீஸார்.
- ★ மாமல்லபுரத்தில் மது போதையில் தாயை வெட்டிய மகன்.
- ★ திருவாரூரில் செங்கல் சூளை தொழிலாளி வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
- ★ நெல்லையில் 4 பேருக்கு அரிவாள் வெட்டு விழுந்துள்ளது.
- ★ தென்காசியில் 4 பேருக்கு அரிவாள் வெட்டு விழுந்துள்ளது.
- ★ செங்கத்தில் ஆறாவது முறையாக கொள்ளைச் சம்பவம் நடந்துள்ளது.
- ★ ஈரோட்டில் த.வெ.க. பேனர் விழுந்து மின் தடை ஏற்பட்டுள்ளது.
- ★ சென்னையில் 61 வயதான மூதாட்டியை 5 பேர் சேர்ந்து கூட்டு பாலியல் கொடுமை செய்துள்ளார்கள்.
- ★ திருவண்ணாமலையில் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த விஜய் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.
- ★ மதுரையில் அழுகிய நிலையில் காருக்குள் இருந்து ஒரு பெண்ணின் உடல் மீட்கப்பட்டுள்ளது.
- ★ தூத்துக்குடியில் பெட்ரோல் பங்கை 10 பேர் கொண்ட கஞ்சா கும்பல் அடித்து சூறையாடி இருக்கிறது.

**- இவை அனைத்தும் பத்து நாட்களுக்குள் நடந்தவை. தூய சக்தி ஆட்சியில், உள்துறையைக் கையில் வைத்திருக்கும் விஜய் சூறையாடி வரும் காட்சிகள் இவை.**

**‘முப்பது நாளில் ஹிந்தி பாஷை’ என்பதைப் போல, ‘இருபதே நாளில் இருண்ட காலம்’ என்று புத்தகம் போடத் தகுதி வாய்ந்தவர் விஜய்.**

### தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்குக் காவிச் சாயமா?

# ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசு வேடிக்கை பார்க்கலாமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டன அறிக்கை!

**சென்னை, ஜூன் 2 -**

**தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்குக் காவிச் சாயமா? தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி வெடிக்கும்! ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசு வேடிக்கைப் பார்க்கலாமா? என்று திராவிடர் கழகத் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:



தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில், ஆளுநர் மாளிகையாகிய ‘மக்கள் பவன்’ என்ற அந்த மாளிகையில் ‘திருவள்ளுவர் திருவிழா’ என்ற ஒன்றைக் கொண்டாடுவதாகவும், அதில் திட்டமிட்டே திருவள்ளுவருக்குக் காவிச் சாயம் அடித் திருப்பதாகவும் இன்றைக்குச் செய்திகள் வந்திருப்பது நமக்கு மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் தருகிறது.

திட்டமிட்டே தொடர்ந்து பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். ஆகிய அமைப்புகள் திருவள்ளுவரை, காவி மயமாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டித்து, இதுவரையில் பலமுறை கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டு, அந்தக் காவி நிறம் எல்லாம் திருவள்ளுவர் சிலையில் இடம்பெற முடியாத அளவிற்குத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார்கள்.

**தமிழ்நாடு முழுவதும் கிளர்ச்சி வெடிக்கும்!**

இந்தப் போக்கு, அதற்கு முன்னால் அந்த மாளிகையில் இருந்த ஆர்.எஸ்.எஸ். காரரான ஆர்.என்.இரவி அவர்கள் தொடங்கியது. இப்போது அதைவிட ஒருபடி அதிகமாக, இப்போது பொறுப்பு ஆளுநராக இருக்கக்கூடிய அர்லேகர் என்பவர், அரசு நிகழ்வில் ‘வந்தே மாதரம்’ பாடலை முதலில் பாட வைப்பது – தமிழ்த் தாய் வாழ்த்துக்கு மூன்றாவது இடம்; இப்போது திருவள்ளுவர் திருவிழாவைக் கொண்டாடுகிறோம் என்கிற பெயரால், தமிழ்நாட்டின் உணர்வுகளுக்குச் சவால் விடுவதைப் போல, திருவள்ளுவருக்குக் காவியடித் திருக்கிறார்கள். அதனை எதிர்த்து மிகப் பெரிய ஒரு கிளர்ச்சி அனைவராலும் நடத்தப்படவேண்டிய அவசியம் உருவாக் கப்படுகிறது.

**தமிழ்நாடு அரசு கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டாமா?**

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய அரசு, ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசு இதையெல்லாம் பார்த்துக் கொண்டு மவுனமாக இருக்கப் போகிறதா? தன்னுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டாமா?

ஆகவே, உடனடியாக இதற்கு நடவடிக்கைகள் தேவை. தமிழ்நாடு முழுவதும் இதைக் கண்டித்து அறப்போராட்டங்கள் வெடிக்கும்.

### இனிப்புகள் – நலஉதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

# அரியலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*அரியலூர், ஜூன் 2-*

அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் முன்னிலை வகித்தார்.

நடைபெற்றக் கூட்டத்தில் மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் கீழ்க்கண்ட தீர்மானங்களை விளக்கி பேசினார்.

வருகின்ற ஜூன் 3 ஆம் தேதி அன்று முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளில் மாவட்டம் முழுவதும் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மாவட்டக் கழகத்தின் சார்பில் இரத்ததான முகாம் நடத்துவது என தீர்மானிக்கிறது.

மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராக நியமனம் செய்த கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துகொள்கிறது.

2026 சட்டமன்றத் தேர்தலில் குன்னம்,அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய மூன்று தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்த வாக்காளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்ட கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறது

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு. கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி. எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா.செந்தில்குமார்,

நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ. கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர்கள். ப. கோபாலகிருஷ்ணன் அ.அல்போன்ஸ், பொதுக் குழு உறுப்பினர்கள் இரா. பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், எஸ்.ஆர். இராமராஜன், க.தர்மதுரை, ஆதி.இளங்கோவன், பானுமதி ராஜேந்திரன், எம்.ஜி.ராஜேந்திரன், செ.சஞ்சய்குமார், மீனா சாமிநாதன், இரா.ரவிக்குமார், இரா.குலோத்துங்கன், செ. இளஞ்செழியன், வை. முருகானந்தம், க.கருப்புசாமி, மா. ஜெயக்குமார், க.அருண்ராஜ், க.இளங்கோவன், ஜோ.வின்சென்ட் ராஜா மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள் பலரும் திரளாக பங்கேற்றனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103-வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் அறிக்கை!



*கிருஷ்ணகிரி, ஜூன் 2-*

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தங்கச் சூரியன் உதிக்கும் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே,

“என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,

பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பலலட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பலஇயற்றி, திட்டங்கள் பலதீட்டி தமிழ்நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,

அய்யன் திருவள்ளுவருக்கு தேர்வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே,

உங்கள் பிறந்த நாளில் வணங்குகின்றோம்.

இந்திய நாட்டிலேயே சிறந்த முதலமைச்சராக பணியாற்றிய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் ஆகியோரின் வழியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அவர்கள் சார்ந்த பகுதிகளில் கழக கொடி ஏற்றி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் எனகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாளை (ஜூன் 3 ம் தேதி) காலை 10.00 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் தலைமையில்

கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை ரோடு மேம்பாலம் அருகே உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, இனிப்பு வழங்கி, நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வள்ளுவரை வாழ விடுங்கள்!

ஆளுநர் குடியிருக்கும்
மக்கள் மாளிகைக்குச்
சில கேள்விகள்


திருவள்ளுவர்
காற்றைப்போல் பொதுவானவர்;
காற்றுக்கு ஏன்
காவிப் பூச்சு?

திருவள்ளுவர்
மானுடத்தின் பொதுச்சொத்து

‘வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து’
என்று பாரதியால்
பொதுமைப்படுத்தப்பட்ட
புலவனுக்கு
திருநீறு என்ற
உள்ளூர் அடையாளம் எதற்கு?

தர்மார்த்த காம மோட்சம் என்ற
நாற்பொருளிலிருந்து விடுபட்டு
அறம் பொருள் இன்பம் என்ற
முப்பொருளை மட்டுமே
முன்னிறுத்தியவனுக்கு
உருத்திராட்சம் என்ற
உருட்டுமாலை தேவையா?


அண்டமெங்கும் விரிந்திருக்கும்
ஆகாயம் என்று
கருதப்படும் வள்ளுவரை
மதம் என்ற
சின்னச் சிமிழுக்குள் அடக்குவது
வரலாற்றின் வழு இல்லையா?



மெய்த் தமிழர்கள்
மீண்டும் மீண்டும்
எதிர்த்துக்கொண்டிருக்க
ஆளுநர்கள் மீண்டும் மீண்டும்
அதே செயலைச் செய்வது
உங்கள் அதிகாரத்தால்
எங்களைக் காயப்படுத்துவது
ஆகாதா?

அன்புகூர்ந்து
நிறுத்திக்கொள்ளுங்கள்;
தாங்கமாட்டார்கள்
தமிழர்கள்

வள்ளுவரை
வாழ விடுங்கள்



கவிப்பேரரசு
**வைரமுத்து**

## தி.மு.க.வை எந்த கொம்பனாலும் வீழ்த்த முடியாது!

# தோல்வியிலும் நெருக்கடியிலும் சுயமாக மீண்டெழும் இயக்கம் இது!

## இளைய தலைமுறை GenZ தி.மு.க.வினர் நடத்திய கூட்டத்தில் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பேச்சு!



**சென்னை, ஜீன் 2 -**

**சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் மே 30 அன்று நடந்த GEN Z DMK சந்திப்பு நிகழ்வில் பங்கேற்ற திமுக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பேசியதாவது:**

மே நான்காம் தேதிக்கு பிறகு தி.மு.க. இன்று மீண்டும் வென்றுள்ளது என்பதை உரக்கச் சொல்லியிருக்கும் உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது வணக்கங்கள். தி.மு.க.வை எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது. நீங்கள் இதை 'ஒன்ஸ்மோர்' கேட்கிறீர்கள். இத்தகைய உணர்வு மிக்க அரங்கில் ஒரு மில்லியன் தடவை வெளிப்படக்கூடிய சொற்கள் இவை.

இந்த நேரத்தில் இதைப் பார்ப்பதற்கு இங்கே தலைவரும், இளந்தலைவரும் இல்லையே, எல்லாவற்றையும் தாண்டி என் தாத்தா கலைஞர் இல்லையே என்கிற மிகப்பெரிய ஆதங்கம் இருக்கிறது.

89 வயதில் டுவிட்டரில் உட்கார்ந்திருந்தார் கலைஞர். டுவிட்டரில் வரும் அனைத்து விசயங்களையும் உன்னிப்பாக கவனிப்பார். குறிப்பாக நம்மை திட்டுபவர்களையும், குறை சொல்லுபவர்களையும் கவனிப்பார். குறை சொல்லுவதில் பாதி பேர் நம்ம பசங்க என்பது அவருக்கு நல்லாவே தெரியும்.

**தி.மு.க. என்றால் எதிரிகளுக்கு பயம்!**

பத்து பதினைந்து பேர் மட்டுமே GEN Z DMK ன் கீழ் ஒன்று கூடலாம் என்று முதலில் முடிவெடுத்திருக்கிறார்கள். இதற்காக ஒரு கஃபேயில் உட்கார்ந்து பேசலாம் என்று ஆலோசித்திருக்கிறார்கள். ஆதரவுக்கரம் அதிகரிக்கவே கஃபே போதாது, சின்னதா ஒரு ரூம் போடலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். மேலும் GEN Z DMKன் பலம் அதிகரிக்கவே சின்னதா ஒரு ஹால் எடுக்கலாம் என்று நினைத்திருக்கிறார்கள். ஆதரவுக்கரம் வலுப்பெற்றுக்கொண்டே போகப்போக, ஹால் போதாது, ஒரு மண்டபமே எடுத்திடலாம் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இவர்களின் முன்னெடுப்புகளைப் பார்த்து வந்த அச்சுறுத்தல்களை எல்லாம் பார்த்தால், தி.மு.க. என்றால் எதிரிகளுக்கு என்றைக்கும் பயம் இருக்கத்தான் செய்கிறது என்பது புரிகிறது. இது மிசாவை பார்த்த திமுகடா. தி.மு.க கூட்டம் என்றால் என்ன என்று இன்னும் சில பேருக்கு தெரியமாட்டேங்குது.

சும்மா விட்டிருந்தா 50 பேர் மட்டும் உட்கார்ந்து பேசியிருப்பாங்க. அச்சுறுத்தலால்தான் இன்றைக்கு இப்படி ஒரு பெருங்கூட்டம் கூடியிருக்கிறது.

தி.மு.க. ஐ.டி. விங் என்பது ஒரு அமைப்பு அல்ல; தி.மு.க. இயக்கமே அதில் இருக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். அதை மனதில் கொண்டுதான் செயல்பட்டு வருகிறோம். சுயமாக எழுந்து வரும் சக்தி உள்ள இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அப்படித்தான் இன்றைக்கு GEN Z DMK தன்னெழுச்சியாக வந்திருக்கிறீர்கள்.

தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு காரணம் பெரியாரும், அண்ணாவும், கலைஞர் அவர்களும், இவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வார்க்கப்பட்ட, நமது திராவிட நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அரவணைப்பு இதுவரை வரலாறு காணாத வளர்ச்சியைக் கொடுத்து தமிழ்நாட்டை தூக்கி நிறுத்தி, 10 ஆண்டு கால இருண்ட ஆட்சிக்கு பிறகு ஒளியை ஏற்றி, விடியலைக் கொடுத்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட மாடல் ஆட்சி.

ரொம்ப சுலபமாக கிடைத்து விட்டால் அதன் மதிப்பு தெரியாது என்று சொல்வார்கள். அதானேலேயே என்னவோ தெரியவில்லை, ஒரு சிலருக்கு அந்த மதிப்பு தெரியவில்லை. அந்த மதிப்பு தெரியாமல் போனதால் ஒரு சில விசயங்கள் நடந்துவிட்டன. ஒரு சில விசயம் அவர்களுக்கு என்ன தெரியவில்லை என்றால், இப்படி அடிக்க அடிக்க, இன்னும் அதிகமாக எழும்பும் ஒரு இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது. இன்று மட்டும் துரோகச் செயல்கள் அல்ல, 75 ஆண்டுகளுக்கு முன்பே இந்த மண்ணை போட்டு நசுக்கிக்கொண்டிருந்த பலரை எதிர்த்து சுயமாக, சுயம்புவாக எழுந்து இளைஞர்களின் இயக்கமாக இருந்த உதித்த சூரியன் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அப்படிப்பட்ட இந்த இயக்கத்தின் மூலமாக கடந்த 75 ஆண்டுகளையும் கடந்து ஒரு இயக்கம் இன்றும் இப்படி ஒரு எழுச்சியோடு இருக்கிறது என்றால் அதற்கு காரணம், கொள்கைகள். இந்த கொள்கை பிடிப்பு இருக்கும் வரை தமிழ்நாட்டை, தமிழனை யாரும் எந்த காலத்திலும் சீண்டிப் பார்க்க முடியாது.

'இந்த' கால கட்டத்தில் 'நான் திமுக காரன்' என்று கொடியை உயர பிடித்துக் கொண்டு போகிறானே... அவன் தான் உண்மையான தி.மு.க.காரன்.

**தமிழ்நாட்டை மீட்டெடுத்த இயக்கம்!**

அந்த காலத்தில் காங்கிரசின் அடக்குமுறையை தாண்டி வந்து அதற்கு பிறகு மிசா என்னும் கொடுங்கோல் காலகட்டத்தை தாண்டி வந்து 13 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாவிட்டாலும் மீண்டும் ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுகள் மட்டுமே இருந்துவிட்டு மிகப்பெரிய கொடூரமான பொய்ச் செய்திகளால் , பொய்ப்பிரச்சாரத்தினால் அன்றைக்கும் தோல்வி கண்டோம். இன்று மட்டும் இது நடக்கவில்லை. அன்றைக்கும் நடந்தது. அதனால் 91ல் ஆட்சி அமைக்க முடியாத சூழலிலும் மீண்டும் 96ல் மிகப் பெரிய வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி பெற்று, மீண்டும் வரலாற்று சிறப்பு மிக்க ஆட்சியை கொடுத்து துவண்டு விழுந்து கிடந்த தமிழ்நாட்டை மீட்டெடுத்தது திராவிட முன்னேற்றக்கழகம். 96ல் மட்டுமல்லாது 2006லும், 2021லும் தமிழ்நாட்டை மீட்டெடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இதை எல்லாம் பார்த்து இன்றைக்கும் தன்னெழுச்சியாக 'நான் இருக்கேன்டா..' என்று வாழையடி வாழையாக, கொள்கை உடன்பிறப்புகளாக பெருகி வரும் கூட்டம் இருக்கிறது. இதனால்தான் சொல்கிறேன்... 'சாதாரணமா வரலடா திமுக காரன்.'

சாதாரணமா வரலடா தி.மு.க.காரன் என்று சொன்னால் அதற்கு பின்னால் 75 ஆண்டுகால வரலாறு இருக்கிறது. 75 ஆண்டுகாலம் தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் , 'என்னடா மக்கள் இப்படி பண்ணிட்டாங்களே...' என்று மக்கள் மீது வெறுப்பு கொள்ளாமல், மக்களுக்கு இன்னும் நாம் சொல்ல வேண்டியது நிறைய இருக்கிறது போல என்று நினைத்து அதை கற்றுக் கொண்டு, வெற்றி வாய்ப்பு இழந்த அடுத்த நாளே, ஏன் என் தலைவர் திராவிட நாயகன் செய்தாரே, எவ்வளவு பெரிய பின்னடைவு..ஆனாலும் மறுநாளே கொளத்தூர் தொகுதியில் நின்று மக்களுக்கு நன்றி சொன்னார்.

இது மாதிரி ஒரே ஒரு தலைவனை, இப்படிப்பட்ட ஒரு தலைவனை இந்த நாடு எந்த காலத்திலாவது பார்த்திருக்கிறதா? அதற்கு காரணம் என்ன? கொள்கை பிடிப்பு, தமிழ்நாட்டின் வளர்ச்சி மீது அசைக்க முடியாத நம்பிக்கை, பற்று, பாசம். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு திமுக காரனை விட்டால் எந்த காலத்தில் வேறு வழியில்லை என்கிற காரணம்தான். திமுக காரன் என்றால் எப்பவுமே ஒரு திமிர் இருக்கத்தான் வேண்டும். திமுகரானால் மட்டும்தான் தமிழ்நாட்டிற்கு வளர்ச்சியை கொடுக்க முடியும். மக்கள் நமக்கு கொடுத்த கொஞ்ச காலத்திலேயே இவ்வளவு பெரிய வளர்ச்சியை கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதற்கு பல சான்றுகள் எங்களால் கொடுக்க முடியும். அதை எல்லாம் சொன்னாலும் நம்ப முடியாத அளவுக்கு பொய்ச்செய்திகள் பரவிக்கொண்டிருக்கின்றன. இந்த பொய்ச்செய்திகளை கட்டுப்படுத்தவே கழகம் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது.

**ஜனநாயகத்தின் மீது மதிப்பு!**

ஆனாலும் என்றைக்கும் நாம் கருத்து சுதந்திரத்திற்கு எதிராக இருக்க மாட்டோம். ஜனநாயக சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நமது இயக்கம் என்றைக்குமே இயங்கும். நாகரீக அரசியலில் இருந்து மாறப்போவதில்லை. ஜனநாயகத்தின் மீதும் சட்டத்தின் மீதும் இருக்கும் மதிப்பை என்றைக்குமே இந்த இயக்கம் குறைத்துக் கொள்ளாது, மீறாது. அதை ஒட்டியே நமது பயணம் இருக்கும். GEN Z DMK வும் அதன்படியே பயணிக்க வேண்டும்.

தன்னெழுச்சியாக GEN Z DMK உதயமானால்தான் உதயசூரியன் வெளிச்சத்தில் தமிழ்நாடு தொடர்ந்து மின்னும். மின்ன வைப்போம். GEN Z DMKக்கு உறுதுணையாக நாங்கள் இருப்போம். இந்த இயக்கத்தின் கடைக்கோடி தொண்டனும் தோளோடு தோளாக நிச்சயமாக நிற்பார்கள். எல்லாவற்றையும் தாண்டி, நமது இளந்தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான அருமை சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், இந்த நாட்டின் நம்பர் ஒன் முதலமைச்சராக இருந்து, மகத்தான வளர்ச்சியை தமிழ்நாட்டிற்கு கொடுத்து, இன்றும் ஒரு அரசியல் தலைவராக எப்படி மாண்போடு இருக்க வேண்டும் என்பதற்கு பிரதான உதாரணமாக இருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் துணை உங்களுக்கு நிச்சயமாக இருக்கும். மீண்டும் வருவோம். தமிழ்நாட்டை நிச்சயமாக மீட்டெடுப்போம். வெல்க திராவிடம். வாழ்க கலைஞர்.

இவ்வாறு முனைவர் டி.ஆர்.பி. ராஜா பேசினார்.





அரியலூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் தலைமையில் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் நடைபெற்றது. உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# மேகதாதுவில் அணைகட்ட முயலும் கருநாடகா அரசைக் கண்டித்து திருவாரூரில் ஆசிரியர் கி. வீரமணி தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!



திருவாரூர், ஜூன் 2 -

மேகதாதுவில் அணைக் கட்ட முனையும் கருநாடகா அரசின் பிடிவாதத்தையும், ஒன்றிய அரசு, உச்சநீதிமன்றத்தின் மெத்தன போக்கையும் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் (31.5.2026) காலை நடைபெற்றது. இந்நிகழ்வில், திராவிடர் கழகத்தின் தலைவர், தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், கொளுத்தும் வெயிலில் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

திருவாரூர் மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் கருநாடக மாநிலம் மேகதாதுவில் அணைகட்ட முனையும் கருநாடக அரசைக் கண்டித்து திருவாரூர் ரயில் நிலையம் எதிரில், நேற்று முன்தினம் (31.5.2026), காலை 9:30 மணி முதல் 10:45 மணி வரை மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் திருவாரூர் மாவட்ட தலைவர் எஸ்.எஸ்.எம்.கே. அருண் காந்தி அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். மாநில ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், ஒரத்தநாடு இரா.குணசேகரன், விவசாய தொழிலாளரணி மாநிலச் செயலாளர் வி.மோகன், மாநில இளைஞர் அணி செயலாளர் நாத்திகப் பொன்முடி, திராவிட மாணவர் கழக மாநில இணைச் செயலாளர் மு. இளமாறன், மாணவர் கழக பொறுப்பாளர் தேவநர்மதா ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்பித்தனர்.

கழகப் பொதுச் செயலாளர் முனைவர் துரை சந்திரசேகரன், திருவாரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன், சி.பி.அய்.எம்.மாவட்டச் செயலாளர் முருகையன், தி.மு.க. நகரச் செயலாளர் பிரகாஷ், மக்கள் நீதி மய்யத்தின் மாவட்டச் செயலாளர் ஹாஜாமைதீன், ம.தி.மு.க. மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் குத்புதீன், எஸ்.டி.பி.அய் மாவட்டத் தலைவர் மாஸ் அஜீஸ் ஃபை, ஒன்றிய தி.மு.க.செய லாளர் தேவா ஆகியோர் முன்னிலை ஏற்று உரையாற்றினர்.

இறுதியாக திராவிடர் கழகத்தின் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் எழுச்சி உரையாற்றினார்.

அவர் தமது உரையில், 1986 ஆம் ஆண்டு ஆகிய அதிமுக ஆட்சியில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை திராவிடர் கழகம் வழங்கியதையும் அதன் பிறகு தொடர்ந்து போராடி வருவதையும் அதன் தொடர்ச்சியாக இப்போது மேகதாது அணைக்கட்டும் முன்னெடுப்பை கருநாடகா அரசு எடுத்து வருகிறது என்பதையும் அதனால் தமிழ்நாடு பாலைவனம் ஆகிவிடும் ஆபத்து இருப்பதை சுட்டிக் காட்டியும், கருநாடக அரசின் பிடிவாதத்தையும், ஒன்றிய அரசு மற்றும் உச்சநதிமன்றத்தின் மெத்தனப் போக்கையும் கண்டித்து உரையாற்றினார்.

தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் உரையாற்றிய பின், திருவாரூர் நகர துணைச் செயலாளர் துரைராஜ் சுதா ஆகியோரின் மகள் அக்ஷரா திவாகர் இணையரின் ஆண் குழந்தைக்கு 'போராட்ட வீரர்' என்று பெயர் சூட்டினார்.

நிகழ்ச்சியில் புதுச்சேரி மாநிலத் தலைவர் சிவ.வீரமணி, திராவிட மாணவர் கழக மாநில செயலாளர் இரா.செந்தூர்பாண்டியன், திராவிட மாணவர் கழக இணைச் செயலாளர் மு. இள மாறன், தஞ்சை மாவட்டக் காப்பாளர் மு.அய்யனார், பட்டுக்கோட்டை மாவட்ட காப்பாளர் பெ.வீரையன்,

மன்னார்குடி மாவட்ட தலைவர் ஆர்.பி.எஸ்.சித்தார்த்தன் உள்ளிட்ட ஏராளமான பொறுப்பாளர்கள் தோழர்கள் அனைத்து கட்சி சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியாக திருவாரூர் மாவட்டச் செயலாளர் கோ.பிளாட்டோ நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

## கழக மகளிர் அணி சார்பில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா –

# தேர்தல் களத்தில் அயராமல் உழைத்த 'வெல்லும் தமிழ்ப் பெண்களுக்கு' நன்றி பாராட்டும் விழா!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, சிறப்புரை! விஜயா தாயன்பன் ஏற்பாடு!

சென்னை, ஜூன் 2 -

தி.மு.க. மகளிர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தி.மு.கழகத்திற்காக தேர்தல் களத்தில் நின்று அயராமல் உழைத்த வெல்லும் தமிழ்ப் பெண்களுக்கு நன்றி பாராட்டும் விழா நாளை (3.6.2026 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் முத்தமிழ்ப் பேரவை, ராஜரத்தினம் கலையரங்கம் ஆர்.ஏ.புரம் (சத்யா ஸ்டுடியோ எதிரில்) நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையேற்று விழாப் பேருரை ஆற்றுகிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக செயலாளர் மயிலை த.வேலு முன்னிலை வகிக்கிறார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார், மகளிர் அணி துணைச் செயலாளர் குமரி விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் சிறப்பாக செய்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் தனது பூம்புகார் தொகுதி செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் திருக்கடையூரில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியச் செயலாளர் அமிர்த.விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்செண்ட், தரங்கம்பாடி பேரூர்ச் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா, மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் எழில் நம்பி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இரா.செந்தில், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாளை

# தஞ்சை மத்திய மாவட்டம் முழுமைக்கும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஜூன் 2 -

தஞ்சை மத்திய மாவட்டத்தில் நாளை (ஜூன் 3) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடி ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவி செய்ய வேண்டி கழக நிர்வாகிகளுக்கு அன்பு வேண்டுகோள் விடுத்து தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளர்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

நாளை (03.06.2026 புதன்கிழமை) காலை 09.00 மணியளவில் நம் உயிரினும் மேலான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்டம் சார்பில் கலைஞர் அறிவாலயம் வாயிலில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தப்பட்டு, அவனைத் தொடர்ந்து காமராஜர் சிலையில் இருந்து ஊர்வலமாக சென்று தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகில் கழகத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளது.

அதுசமயம் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட கழகப் பிரதிநிதிகள், அனைத்து நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

குறிப்பு:- நாளை (ஜூன் 3) தஞ்சை மத்திய மாவட்டம் முழுமைக்கும் கழக இருவர்ண கொடியேற்றி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத் தலைவர் அவர்களின் பேச்சுக்களையும், கழக கொள்கை பாடல்களையும் ஒளிபரப்பி ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கியும் கொண்டாட வேண்டும்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரைசந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கையை வெளியிட்டுள்ளார்.